தகவல் சட்டம் 2005
அறியும் உரிமைச்

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராய சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் சாலை சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை – 600 018. தொலைபேசி எண். 044–*2435 7590.*

**ஆணை நாள் – 17.02.2015**

**முன்னிலை**

**திரு. S.F.அக்பர், B.Sc., B.L.,**
**மாநில தகவல் ஆணையர்**

**<u>வழக்கு எண்.4735/F/2014</u>**

திரு. D.மனோகரன்,
வல்லம் வழி,
திருவடிசூலம் (அஞ்சல்),
திருவடிசூலம் – 603 003.
காஞ்சிபுரம் மாவட்டம் . .. மேல்முறையீட்டாளர்

பொதுத் தகவல் அலுவலர்,
செயற்பொறியாளர்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
செங்கை மின் பகிர்மான வட்டம், செங்கல்பட்டு,
காஞ்சிபுரம் மாவட்டம் . .. பொது அதிகார அமைப்பு

*********

**ஆணை**

இவ்வாணையத்தால் இன்று (17.02.2015) நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு.D.மனோகரன் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறைகள்) விதிகள், 2012 விதி 7(1)–ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராக வேண்டுமென்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்பது சுட்டிக்காட்டப்படுகிறது. பொது அதிகார அமைப்பின் சார்பாக, திரு.A.R.மாஸ்கர்னஸ், பொது தகவல் அலுவலர் / செயற்பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், செங்கல்பட்டு அவர்கள் இன்றைய விசாரணைக்கு ஆஜரானார்.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)ன் படியான தனது 23.12.2013 தேதியிட்ட மனுவில், ஆலப்பாக்கம் ஹரிஹரன் பஜனைக் கோயிலுக்கு தனி மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருப்பதாகவும், செங்கல்பட்டு மாவட்டம் ஆலப்பாக்கம் கிராமத்தில் அந்த மின் இணைப்பு விதிகளுக்கு புறம்பாக அருகிலுள்ள தேவி கருமாரி அம்மன் கோயிலுக்கு

மின்சாரம் திருடப்படுவதாக புகார் சொல்லி, ஹரிஹரன் பஜனைக் கோயில் மின் இணைப்பு சம்பந்தப்பட்ட ஆவணங்களைக் கோரி தகவல் கேட்டிருக்கிறார். அதற்கு பொதுத் தகவல் அலுவலர் பதில் ஏதும் அனுப்பவில்லை. மேல்முறையீட்டாளர் தனது **24.01.2014** தேதிய சட்டப் பிரிவு **19(1)**ன்படியான மேல்முறையீட்டு மனுவிற்கு, மேல்முறையீட்டு அலுவலர் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர் **20.02.2014** தேதிய பதிலில் தெளிவுரை கேட்டிருப்பதால், அம்மனு RTI சட்டப்பிரிவு 2(f)ல் வராது என்று பதில் அனுப்பியிருக்கிறார். அதன் பிறகு, **12.02.2015** அன்று இன்னொரு பதிலை அதே பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டு அலுவலர் சார்பாக அனுப்பி, அதில் மின் திருட்டு எதுவும் நடைபெறவில்லை என்றும், மின் இணைப்பு வழங்கி வெகுகாலம் ஆனதால் அந்த விண்ணப்பத்திற்கு அளிக்கப்பட்ட ஆவணங்கள் ஏதும் கிடைக்கவில்லை என்றும் தெரிவித்திருக்கிறார். இது ஏற்கத்தக்க பதில் என்று கருதுவதற்கில்லை. பொதுத் தகவல் அலுவலரிடம் இருக்க வேண்டிய ஆவணங்களிலுள்ள தகவல்கள் வழங்கப்பட வேண்டும். அந்த ஆவணங்கள் விதிமுறைகளின்படி காலப்போக்கில் அலுவலக உத்தரவின்பேரில் அழிக்கப்பட்டதற்கான சான்றுகள் ஏதும் இல்லாமல், தேடியும் கிடைக்கப்பெறவில்லை என்ற பதில் RTI சட்ட வகைமுறைகளுக்கு உகந்ததாக இல்லை என்பது சுட்டிக்காட்டப்படுகிறது. இது ஒருபுறமிருக்க, பொதுத் தகவல் அலுவலர் இன்னும் சிரத்தையுடன் தேடி மனுதாரர் கேட்டிருக்கிற அந்த தகவல்களை வழங்க வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறார். அவசியமானால், மின் இணைப்பு பெற்று பயன்படுத்தி வரும் மின் நுகர்வோரிடமிருந்து அந்த ஆவணத்தைப் பெற்று அதனை இவ்வாணைக் கிடைக்கப் பெற்ற ஒரு மாத காலத்திற்குள் மனுதாரருக்கு வழங்க வேண்டுமென்று பொதுத் தகவல் அலுவலர் அறிவுறுத்தப்படுகிறார்.

**3.** புதிதாக வனையப்பட்டுள்ள தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு) விதிகள், **2012**, விதி **7**–ன்படி, மேல்முறையீட்டாளர் இவ்வாணையத்தின் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயத் தேவை. அழைப்பாணை அனுப்பியும் மேல்முறையீட்டாளர் இன்றைய விசாரணைக்கு ஆஜராகவில்லை. தான் விசாரணைக்கு ஆஜராகாததற்கான காரணங்களை விளக்கி விசாரணை தேதிக்கு முன்பாக இவ்வாணையத்திற்குக் கடிதமும் அனுப்பவில்லை. இனிவருங்காலங்களில், ஆணையத்திலிருந்து விசாரணைக்கு அழைப்பாணை அனுப்பப்படும்போது, விசாரணைக்கு ஆஜராக வேண்டுமென்று மேல்முறையீட்டாளர் அறிவுறுத்தப்படுகிறார்.

**4.** மனுதாரர் சார்பாக திரு.சேகர் என்பவர் தான் மனுதாரராகிய திரு.மனோகரன் சார்பாக விசாரணைக்கு ஆஜராகவேண்டுமென்று அனுமதி கோரினார். ஆனால், அதற்கான அதிகாரமளிப்புக் கடிதம் எதுவும் சமர்ப்பிக்கவில்லை. அன்னார் மனுதாரரின் அறிவுறுத்தலின்பேரில்தான் ஆஜராகியிருக்கிறார் என்பதை தெரிந்து கொள்ள இயலவில்லை. எனவே, திரு.சேகர் என்று சொல்பவரின் இந்த கூற்று ஏற்கத்தக்கதல்ல என்று இவ்வாணையம் கருதுகிறது.

**5.** இந்த வழக்கைப் பொறுத்தவரை, இதில் மேலும் பரிசீலனை செய்ய வேண்டிய வேறு அம்சங்கள் எதுவுமில்லையெனக் கருதி, இந்த மேல்முறையீடு இத்துடன் முடிக்கப்படுகிறது.

**ஒம்/– (எஸ்.எஃப். அக்பர்)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.4735/F/2014</u>**

பெறுநர்

<u>பொது அதிகார அமைப்பு</u>

பொதுத் தகவல் அலுவலர்,
செயற்பொறியாளர்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
செங்கை மின் பகிர்மான வட்டம், செங்கல்பட்டு,
காஞ்சிபுரம் மாவட்டம்.

<u>மேல்முறையீட்டாளர்</u>

திரு. D.மனோகரன்,
வல்லம் வழி,
திருவடிசூலம் (அஞ்சல்),
திருவடிசூலம் – 603 003.
காஞ்சிபுரம் மாவட்டம் .

**sg/pa**